செய்தி வெளியீடு எண்: 556 நாள்:29.08.2019

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகள் தொடர்வதைக் கண்டு மனம் புழுங்கும் மு.க. ஸ்டாலின் மனம் போனபடி பேசுவது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல.

## மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களின் அறிக்கை.

உலக முதலீட்டாளர்களை தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அழைக்கும் சிறப்பான முயற்சியில் மாண்புமிகு முதலைமைச்சர் திரு.எடப்பாடி பழனிசாமி அவர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா, துபாய் ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டிருப்பதை நல்லோர் உள்ளமெல்லாம் வரவேற்று மகிழும் வேளையில், வழக்கம்போல் தாங்கமுடியாத விரக்தியிலும், காழ்ப்புணர்ச்சியிலும் எதிர்க்கட்சித்தலைவர் மு.க. ஸ்டாலின் முதலமைச்சரின் முயற்சிகளை விமர்சித்துவருகிறார்.

இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலங்களில், தமிழ்நாட்டில் ஏற்பட்ட தொழில்வளர்ச்சியை இந்த நாடே கண்கூடாகக்கண்டது. அமெரிக்காவின் புகழ்பெற்ற ஃபோர்ட் கார் உற்பத்தி நிறுவனம் உட்பட அம்மா அவர்களின் ஆட்சியின்போது தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் ஏராளம். அதன் விளைவாகத்தான் இந்திய நாட்டின் மிகச்சிறந்த தொழில் வளர்ச்சி பெற்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டின் விளைவாக ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையில் என்னென்ன தொழில்கள் தொடங்கப்பட்டன என்பதை 2016ஆம் ஆண்டு

ஆகஸ்ட் 30ஆம் தேதி சட்டமன்றத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள். அன்றைய தேதியின்படி 87 ஆயிரம் கோடி ரூபாய்க்கு முதலீட்டுப் பணிகள் நடைபெற்றுவருவதை மாண்புமிகு அம்மா அவர்கள் பட்டியலிட்டார்கள்.

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பாதையில் நடைபெறும் முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள் தலைமையிலான அரசு இந்த ஆண்டின் தொடக்கத்தில் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தியது. உலகின் பல நாடுகளில் இருந்து வந்திருந்த முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் மூன்று லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் தமிழ்நாடு அரசுடன் கையெழுத்திட்டனர்.

மற்ற மாநிலங்களில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம் செயல்படுத்தப்பட்ட புதிய தொழில் திட்டங்களைகாட்டிலும் பல மடங்கு கூடுதல் சதவீதத்தில் தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் தொடங்கப்பட்டிருப்பதை புள்ளி விவரங்கள் விளக்குகின்றன. தொழிற்சாலைபணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையிலும், மொத்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடுதான் நாட்டிலேயே முதலாவது மாநிலம் என்ற உண்மையை எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அறியவில்லை என்பதை அவரது பேச்சிலும், அறிக்கையிலும் தெரிகிறது.

ஒரு மாநிலம் எந்த அளவிற்கு தொழில் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை அந்த மாநிலத்தின் மொத்த மின் நுகர்வை வைத்து

அளவிடலாம். இந்தியாவில் மாதம் ஒன்றுக்கு சுமார் 16,000 மெகாவாட் மின்சாரத்தைப் பயன்படுத்தும் மிகச்சில மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

தொழில் நுட்பக்கல்வி கற்ற இளைய தலைமுறையினர், சட்டம், ஒழுங்கு சிறப்புற நிலை நாட்டப்பட்டிருக்கும் நல்லாட்சி, தரமான உள்கட்டமைப்பு வசதிகள், தடையில்லா மின்சாரம் என்று முதலீட்டாளர்கள் விரும்பும் அனைத்தையும் வழங்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதை அம்மா வழியில் நடைபெறும் முதல்வர் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களின் அரசு உறுதி செய்திருக்கிறது.

அமெரிக்க நிறுவனங்கள் பல, சீனாவிலிருந்து வெளியேறும் சூழல், ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேறும் நிலைமை போன்ற உலகப் பொருளாதார மாற்றங்களால் நம்நாட்டிற்கு ஏராளமான புதிய தொழில் நிறுவனங்கள் வருவதற்கு வாய்ப்பு இருப்பதாக பல நிலைகளிலும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பொன்னான வாய்ப்பை சரியாகப்பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முனைப்பான முன்னேற்ற சிந்தனை முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு ஏற்பட்டதன் காரணமாக அந்த நாடுகளின் முதலீட்டாளர்களை நேரடியாகச் சந்தித்து அழைப்பது காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் நல்வாய்ப்பு என்று பல்வேறு பணிகளுக்கிடையே முதலமைச்சர் இந்தப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

இந்த பயணத்தின் விளைவாக பல புதிய தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய இருப்பதையும், அதன் மூலம் நம்

இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் ஏராளமான புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்க இருப்பதையும் எதிர்க் கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் பார்த்து மூக்கின்மேல் விரல் வைக்கத்தான் போகிறார். அதுவரை அவரது வழக்கமான பொன் மொழியான “வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ” என்று அவர் ஏதும் பேசாமல் பொறுமைகாக்க வேண்டும்.

சட்டமன்றத்தில் ரகளை செய்து ஆட்சிக்கு ஆபத்து விளைவிக்கும் முயற்சியில் தோற்றுப்போனதால், விரக்தியில் தனது சட்டையை கிழித்துக் கொண்டு சாலையில் நின்றுகொண்டிருந்தவர்களை நோக்கி ஓடிவந்த எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு முதலமைச்சர் முயற்சியால் வரயிருக்கும் புதிய முதலீடுகளைக்கண்டு, காழ்ப்புணர்ச்சி கொண்டு, மீண்டும் ஒருமுறை சட்டையை கிழித்துக்கொண்டு சாலையில் அலையும் நிலைவந்தால் அது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல.

டி. ஜெயக்குமார்
மாண்புமிகு மீன்வளம், பணியாளர்
மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**